பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 27 வியாழக்கிழமை 11.07.2024 கதிர் 246

# கூட்டமைப்பின் தலைவர் தெரிவு தமிழ் அரசின் பொதுக் குழுவிடம்

## நேற்றுக்கூடிய அரசியல் குழு தீர்மானம்

தமிழ் அரசுக் கட்சியின் நாடாளு மன்றக் குழுத் தலைவராக இருந் தவரான சம்பந்தனின் மறை வைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவே கூடி முடிவெடுக்கும் என்று அந்தக் கட்சியின் அரசியல் குழு நேற்றுத் தீர்மானித்தது.

தமிழ்த் தேசியக் கூ-ட்டமைப்பு என்ற பெயரில் செயற்பட்டு வந்த தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டி யிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பி னர்களின் தலைவர் பதவியை ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்கு வழங்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலாகவே ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியைப் பெறும் ரெலோவின் நீண்ட நாள் கனவு நேற்றுப் பிசுபிசுத்துப் போய்விட்டது. பெரும் தலைவர் சம்பந்தன் இருக்கும்போதே தன்னையும் இணைத் தலைவர் என்று சொல்லித் திரிந்தவர் செல்வம் அடைக்கலநாதன். சம்பந்தன் மறைவுக்குப் பின்னர் அந்தக் கதிரையைப் பிடிப்பதற்கு முயற்சி செய்தார். அவருக்கு அந்தக் கதிரையைக் கொடுக்கலாமா என்று நேற்றுக் கொழும்பில் கூடிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஆராய்ந்தது. ஆனால், தமிழ் அரசுக் கட்சி எதிர்பார்க்கப்பட்டது போலவே பிடிகொடுக்காமல் நழுவிவிட்டது. கட்சி ரீதியாக முடிவெடுத்துத்தான் அதனை அறிவிக்க முடியும் என்று கூறி விடயம் அப்போதைக்கு ஒத்திப் போடப்பட்டுவிட்டது.

கூட்டத்தில் பேசும்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார். சம்பந்தர் கூட்டமைப்பின் ☞2

### வேலை நிறுத்தத்தால்

## வருமானம் கிட்டாவிட்டால் சம்பளம் வழங்க முடியாது

### அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு

வேலைநிறுத்தம் காரணமாக நாட்டுக்கு வருமானம் கிடைக்காவிட்டால் சம்பளம் வழங்க முடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளர், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம் எவ்வாறாயினும் ஜூலை 10 வழங்கப்படும் என திறைசேரி தெரிவித்துள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கலால் திணைக்களம், சுங்கத் திணைக்களம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் என்பவற்றினூடாக நாளாந்தம் ☞2

## இந்த மாத இறுதிக்குள் ஜனாதிபதி தேர்தல் திகதி

இம்மாத இறுதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் திகதியை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித்தேர்தலுக் கான ஏற்பாடுகள் தொடர்பில் திங்கட்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

இக்கூட்டத்தில் பொலிஸ்மா அதிபர் மற்றும் தபால்மா அதிபர் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி தேர்தலுக் கான வேட்புமனுக்கள் உள்ளிட்ட ஆவ ணங்களை அச்சிடும் பணிகள் தற்போது ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகர் ☞2

### தோட்டக் கம்பனிகள் தொடரவேண்டுமாயின்

## சமசரப் பேச்சுக்களை நடத்தி அதிகரித்த சம்பளம் வழங்குக

### வடிவேல் சுரேஸ் எம்.பி. வலியுறுத்து

பெருந்தோட்டங்களைத் தொடர்ந்தும் கம்பனிகள் நடத்திச் செல்ல வேண்டு மாயின் சமரச பேச்சுக்களை நடத்தி, அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்க நடவ டிக்கை எடுக்க வேண்டும். மே மாதம் முதலாம் திகதியில் நிலுவை சம்பளத்துடன் சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும் - என பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மதுவரி கட்டளைச் சட்டம் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டங்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற் றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றியதாவது:

மலையக மக்கள் பல் வேறு துன்பங்களுக்கு ☞2

## பால்நிலை வன்முறைகளை ஒழிக்கும் தேசிய செயற்பாட்டு திட்டத்திற்கு அனுமதி

இலங்கையில் பால் மற்றும் பால் நிலை அடிப்படை யிலான வன்முறைகளை ஒழிப்பதற்காக பல்து றைசார் தேசிய செயற் பாட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத் துவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச் சராக ஜனாதிபதி சமர்ப் பித்துள்ள யோசனைக்கே இவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக் கப்பட்டுள் ளதாவது:

வன்முறையற்றதும் நீதியானதுமான சமூகச் சூழலில் பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் மற்றும் பாலநிலையில் பன்மைத்துவம் கொண்ட குழுக்கள் வாழ்வதற்கான உரிமையை உறுதிப் படுத்துவதற்காக கொள்கைரீதியான இடை யீடுகள் தேவையென இலங்கையில் பால் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன் முறைகளை ஒழிப் பதற்கான முதலாவது செயற்பாட்டுத் திட்டம் 2012 ☞8

## சம்பள அதிகரிப்பு வழங்காவிட்டால் காணிக் குத்தகை இனி இரத்தாகும்

### அதற்கான சட்டத்தைத் துரிதப்படுத்தத் தீர்மானம்

தோட்டத் தொழிலா ளர்களுக்கு நிச்சயிக் கப்பட்ட சம்பளத்தை செலுத்தாத பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுடன் அரசு செய்துள்ள காணிக் குத்தகை உடன்படிக் கையை இரத்து ☞8

## பெருந்தோட்டப் பாடசாலைகளில் அறுபது 'ஸ்மார்ட்' வகுப்பறைகள்

### ஆளும் தரப்புத் தீர்மானம்

நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பெருந் தோட்டப்பாடசாலைகளில் 60 'ஸ்மார்ட்' வகுப்பறைகளை நிர்மாணிப்பதற்கு ஆளும் தரப்புத் ☞8

## 10 ஆண்டுகள் இதே பாதையில் சென்றால் அபிவிருத்தி அடைய வாய்ப்பு இருக்கிறது

### ஜனாதிபதி தெரிவிப்பு

இன்னும் 10 வருடங்கள் இந்த சரியான பாதையில் சென் றால் எந்த பிரச்சினையும் இல்லாமல் அபிவிருத்தி அடைய வாய்ப்பு இருக்கி றது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலி கரந்தெனிய பிரதேசத்தில் நிர்மாணிக் கப்பட்டுள்ள கறுவா அபிவிருத்தி திணைக் களத்தின் பிரதான அலுவ லகத்தை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

200 ஆண்டுகளுக் குப் பிறகு கறுவா அபிவி ருத்தித்திணைக்களத்தை ஆரம்பித்திருக்கிறோம். அதன்படி, நாட்டில் கறுவாச் செய்கையை மேம்படுத்தும் பணிகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாட்டில் மீண்டும் கறுவாச் செய்கையை அபிவிருத்தி செய்வது இத்திணைக்களத்தின் பொறுப்பாகும். முதலில் கறுவா உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அங்கு, ஒவ்வொரு ஏக்கரிலிருந்தும் அதிகபட்ச உற்பத்தியைப் பெற வேண்டும். மேலும், குறைந்த தரத்திலான கறுவாவுக்குப் பதிலாக உயர்தரத்திலான கறுவா வகைகளை வளர்க்க வேண்டும்.

கறுவா பயிரிடும் நிலப் பரப்பை அதிக ரிக்கவேண்டும். ஆளும் தரப்பு புதிய காணிகளை வழங்குவதற்கும் அவர்களின் நிலத்தில் ஏனைய பயிர்களுடன் கறுவாவைப் பயிரிடு வதற்கும் ஆளும்தரப்புத் திட்டமிட்டுள்ளது. இந்த நடவடிக்கை மூலம் கறுவா உற்பத்தியை மூன்று முதல் நான்கு மடங்கு வரை அதிக ரிக்கலாம்.

கறுவாவிற்பனையை அதிகரிக்கவேண்டும். விற்பனை இல்லாமல் உற்பத்தியை ☞8

## பயணிகள் ஓட்டோக்களை கட்டுப்படுத்த சட்ட திருத்தம்

### அமைச்சர் பந்துல அறிவிப்பு

பயணிகள் சேவை யில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளைக் (ஓட் டோக்கள்) கட்டுப்படுத்தி, சீர்ப்படுத்த வகையில் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படுகின்றது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ☞8

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து நாடாளுமன்றில் விவாதம்

ஜனாதிபதி தேர்தலை உரிய காலப்பகுதியில் நடத்துவதன் தேவை தொடர்பில் நாடாளுமன்ற விவாதமொன்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் ☞8

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

நாடாளுமன்றக் குழுத் தலைவராக இருந்தபோது அவருக்குப் பதிலாக அது தொடர்பான பணிகள் அனைத்ததையும் ஆற்றினார், அதுபோன்று கூட்டமைப்பின் தலைவராக செல்வம் இருக்க சுமந்திரனே பணிகளை ஆற்றி இணைத் தலைவர்களாகச் செயற்படலாம் என்று அவர் தெரிவித்தார். ஆனால், சம்பந்தனும் சுமந்திரனும் கூட்டமைப்பின் இணைத் தலைவர்களாக ஒருபோதும் செயற்பட்டதில்லை. பெருந்தலைவர் சம்பந்தனின் அரசியல் உதவியாளர் போன்று சுமந்திரன் காரியங்கள் ஆற்றி வ்ந்தார் என்பதே உண்மை. எனவே செல்வமும் சுமந்திரனும் இணைத் தலைவர்கள் போன்று செயற்படலாம் என்பதெல்லாம் சுத்த அபத்தம்.

நேற்றைய நாடாளுமன்றக் கூட்டத்திற்குப் பின்னர் நிகழ் நிலையில் கூடிய தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு இந்த விவகாரம் குறித்து, அதாவது கூட்டமைப்பின் அடுத்த தலைவர் யார்என்பதுகுறித்துகட்சியின்மத்திய குழுவில் ஆராய்ந்து முடிவெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அதேநேரம்ஜூலை14நடக்கஇருந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டம் அன்றையதினத்தில்நடக்காதுஎன்று தெரிகின்றது. கடந்த மத்திய குழுக் கூட்டத்திலேயே ஜூலை 14 அடுத்த மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டி கட்சியின் வழக்குத் தொடர்பாக இறுதி முடிவு எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் நேற்றைய அரசியல் குழுக் கூட்டத்தில்மத்தியகுழுக்கூட்டத்தை ஜூலை 14 கூட்ட முடியாத நிலை இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. தேவையென்றால் வழக்குடன் தொடர்புடையவர்கள் மட்டும் அன்றைய தினம் கூடிப் பேசலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகமொத்தத்தில்கூட்டமைப்பின் அடுத்த தலைவர் தொடர்பில் இப்போதைக்குதமிழ்அரசுக்கட்சியின் முடிவு தெரியவரப்போவதில்லை. ரெலோவின்தலைவர்கனவுகானல் நீராகிப் போவதுதான் மிச்சம்.

............................

கூட்டமைப்பின் தலைமைப் பதவிக்கான முயற்சி சறுக்கியதை அடுத்து இனி தமிழ்த் தேசியப் பேரவைக்கான முயற்சிகள் மீண்டும் முடுக்கி விடப்படும் என்று எதிர்பார்க்கலாம். முன்னதாகதமிழ்த் தேசியப்பேரவையை உருவாக்கிய 7அரசியல்கட்சிகளும்தமிழ்மக்கள் பொதுச் சபையும் இணண்ந்து ஜூலை 6 யாழ்ப்பாணத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதாகப் பெரும் ஆரவாரமாகஅறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், பின்னர் அந்தத் திகதியில் கையொப்பம் இடப்படவில்லை. அது தொடர்பில் பகிரங்க அறிவிப்பு எதுவும் விடுக்கப்படவும் இல்லை.

ஏன் கையெழுத்திடவில்லை என்று கேட்டதற்கு, சம்பந்தன் ஐயாவின் இறுதிக் கிரியைகளை ஒட்டி அந்த நிகழ்வு தள்ளிப் போடப்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டது. சம்பந்தனின் இறுதிக் கிரியை ஜூலை 7 திருகோணமலையில் நடந்தது. அதற்கு முதல் நாள் கையெழுத்து வைப்பதில் என்ன பிரச்சினை என்பது குறித்து எந்தத் தெளிவுபடுத்தலும் இல்லை.

இப்போது கூட்டமைப்பின் தலமைப் பதவி அனேகமாக ரெலோவுக்குக் கிடைப்பது அரிது என்றாகிவிட்ட நிலையில், ஒப்பந்தக் கைச்சாத்து விவகாரம் மீண்டும் சூடுபிடிப்பதற்கான சாத்தியங்கள் அதிகமுண்டு.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றத்தில் கூடிய தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது அடுத்த தலைவர் யார் என்பது தொடர்பில் ஆராய்ந்தனர். அனுபவம் மற்றும் கட்சி ஒன்றின் தலைவர் என்ற அடிப்படையில் தன்னைத் தலைவராகத் தெரிவு செய்யுமாறு ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தன்னைத் தானே பிரேரித்தார்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று ஒன்று இல்லாத நிலையில், ரெலோ ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்கிற புதிய அமைப்பை உருவாக்கி அதில் இடம்பெற்றுள்ள நிலையில், தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைமைக்கு எப்படி உரிமை கோர முடியும் என்று அங்கு தமிழ் அரசுக் கட்சியினரால் கேள்வி எழுப்பப்பட்டது.

”இதுவரை காலமும் சம்பந்தன் தலைவராக இருந்தாலும் அவர் சார்பில் சுமந்திரனே அனைத்துப் பணிகளையும் ஆற்றிவந்தார். அதேபோன்றுஇப்போதும்செல்வமும் சுமந்திரனும் இணைத்தலைவராக இருந்து அந்தப் பணிகளை ஆற்ற முடியும். அதாவது செல்வம் தலைவராக இருக்க, அவர் சார்பில் சுமந்திரனே வழக்கம்போன்று அனைத்துப் பணிகளையும் செய்யலாம், இருவரும் இணைந்து இந்தப்பணியைமுன்னெடுக்கலாம்” என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

ஆனால், கூட்டமைப்பில் இல்லாமல் ரெலோ ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியில் சேர்ந்திருக்கும் நிலையில் எப்படி தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிற்குத் தலைமை தாங்க முடியும்? அப்படியென்றால்மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ரெலோ வரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கூட்டமைப்பில்இருந்துகொண்டு தலைமை தாங்குவது வேறு. வேறு ஒரு கூட்டணியில் இருந்துகொண்டு இதற்குத் தலைமை தாங்குவது வேறு என்றார். அதற்கு ஜனநாயகத் தமிழ்த்தேசியக்கூட்டணியைவிட்டுத் தாம் வரமுடியாது என்று செல்வம் அடைக்கலநாதன் திட்டவட்டமாகத் தெரிவித்தார். அதையடுத்து, இந்த விடயம் குறித்துத் தமிழ் அரசுக் கட்சி ஆராய்ந்த பின்னரே முடிவு செய்ய முடியும் என்று தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டவட்டமாகத்தெரிவித்துவிட்டனர்.

இதையடுத்து நேற்று நிகழ்நிலையில் கூடிய தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு இந்த விவகாரம் குறித்து விரிவாக ஆராய்ந்தது. கட்சி சார்ந்து எடுக்கக்கூடிய எந்தவொரு முடிவையும் கட்சியின் மத்திய குழுவே எடுக்க முடியும் என்பதால் மத்திய குழுக் கூட்டத்தில் இது பற்றி ஆராய்ந்து முடிவெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசியல்குழுக்கூட்டத்தில், தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைமைப் பதவி, அதனைஇதுவரையில்சம்பந்தனின் சார்பில்ஆற்றிவந்த சுமந்திரனுக்கே வழங்கப்படவேண்டும் என்றும் கட்சியின் முன்னாள் செயலாளர் துரைராசசிங்கம் வலியுறுத்தினார். அப்படிப்பட்ட ஒரு நிலையில் தானும் சுமந்திரனும் அந்தப் பதவியை இணையாக வகிக்க முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சுட்டிக்காட்டினார். இதனை அடுத்து இது குறித்த இறுதி முடிவை கட்சியின் மத்திய குழுவில் ஆராய்ந்து முடிவெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

## இந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார் எனவும் உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டு விநியோகம் உட்பட ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சகல நடவடிக்கைகளையும்தடையின்றி மேற்கொள்வதாக தபால்மா அதிபர் உறுதியளித்தார் எனவும் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த தேர்தல்களை விட இம்முறை அச்சிடும் செலவு 4 மடங்கு அதிகரிக்கும் என்று அரச அச்சகத் திணைக்களப் பணிப்பாளர் மதிப்பீடு சமர்ப்பித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்து தேர்தல் முடியும் வரை அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுமென பொலிஸ்மா அதிபர் இந்த கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின்படி ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதற்கான அதிகாரம் ஜூலை 17 தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கும். அதைஅடுதத்துஇந்தமாதஇறுதிக்குள் தேர்தல் திகதி அறிவிக்கப்படும் என்றும்தேர்தல்கள்ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார்.

# தேரவாத பௌத்த நாடுகளிலேயே இலங்கை மட்டுமே பின்னடைவு

## ஜனாதிபதி கவலை தெரிவிப்பு

தேரவாத பௌத்த நாடுகள் அனைத்தும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் அடிப்படையில் முன்னேற்றமடைந்துள்ளதாகவும், இறக்குமதிப் பொருளாதார முறையை பின்பற்றி இலங்கை மட்டுமே வங்குரோத்து நிலைக்குச்சென்றுள்ளதாகவும்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

எனவே, நாட்டில் புதிய பொருளாதார, அரசியல் முறைமைகள்விரைவில்உருவாக்கப்படவேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டை புதிய பாதைக்கு கொண்டு செல்வதற்கு மகா சங்கத்தினரின் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் மிகவும் முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

காலி கரந்தெனிய சிறி அபயதிஸ்ஸ பிரிவெனாவில் பிற்பகல் இடம்பெற்ற அமரபுர மகாநிக்காய – ஆரியவன்ச சத்தம்ம பீடத்தின் 44ஆவது உபசம்பதா நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

துறவற வரலாற்றில் உபசம்பத நிகழ்வு முக்கியமானதாகும். அந்த விழாவின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டே முன்பிருந்தே இதற்காக அரச அனுசரணை வழங்கப்படுகிறது. இன்றைய உபசம்பதா நிகழ்வும் அரச அனுசரணையுடன் நடைபெறுகிறது.

இலங்கையில் உபசம்பதாநிகழ்வு இல்லாத காலமும் இருந்தது. அப்போது, பிக்குகளின் தலையீட்டுடன் சியம் நிக்காயவில் முதலாவது உபசம்பதா நிகழ்வு அரச அனுசரணையுடன் நடத்தப்பட்டது.

மீண்டும் அந்த முறைமை இல்லாது போயிருந்த வேளையில் மியன்மாரின் உதவியுடன் அமரபுர நிக்காயவில் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து அரச அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம்பெற்று வருகிறது. ஆங்கிலேயர் தென் பகுதிகளை ஆட்சி செய்த காலத்தில் துறவறத்தையும் சாசனத்தையும் பேணிக்காக்க ஆற்றிய சேவை அளப்பரியது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், இந்த நாட்டின் பொருளாதாரம் சரிந்தது. நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றது. நீண்டகாலமாக பேணப்பட்ட இறக்குமதி பொருளாதாரக் கொள்கையினால் அந்த நிலைமையை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் மற்றைய அனைத்து தேரவாத பௌத்த நாடுகளும் ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்தன.

எனவே, நாட்டில் புதிய பொருளாதார, அரசியல் முறைமைகள் விரைவில் உருவாக்கப்பட வேண்டும். நாட்டை புதிய பாதைக்கு கொண்டு செல்வதற்கு மகா சங்கத்தினரின் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் மிகவும் முக்கியமானது என்றார்.

# வாகன இறக்குமதி தொடர்பில் ஓகஸ்ட் நடுப் பகுதியில் முடிவு

வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தொடர்பில் இறுதித் தீர்மானம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இரண்டாம் வாரம் எடுக்கப்படும். அது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த குழு ஜூலை 4 கூடியுள்ள நிலையில் அதன் இறுதி அறிக்கை ஓகஸ்ட் மாதம் இரண்டாம் வாரத்தில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மது வரி கட்டளைச் சட்டம் மற்றும் ஏற்றுமதி,இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டங்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாகன இறக்குமதி குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கைக்கு இணங்க நாட்டின் கையிருப்புக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் மக்களின் முக்கிய தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி வாகன இறக்குமதியை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

பொது போக்குவரத்து சேவைக்கான வாகனங்கள், பொருட்கள் போக்குவரத்துக்கான வாகனங்கள், மாற்று வாகனங்கள், சாதாரண வாகனங்கள், மற்றும் தனியார் வாகனங்கள் என்ற பின்பற்றலுக்கு இணங்க வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் சுற்றுலாத் துறையின் தேவைகளுக்காக இறக்குமதி செய்யப்படுவதற்கு அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டிருந்த ஆயிரம் வாகனங்களில் எந்தவொரு வாகனமும் இதுவரை இறக்குமதி செய்யப்படவில்லை.

அந்த வாகனங்களில் 250 பஸ் வண டிகள் மற்றும் 750 வான் ரக வாகனங்களையும் இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அது சுற்றுலாத்துறை அமைச்சின் அனுமதியுடன் இறக்குமதி செய்யப்படவுள்ளது என் றார்.

## வருமானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கும்வருமானத்தினூடாகவே அரசஊழியர்களது சம்பளம்மற்றும் ஒய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

இவற்றினூடாகக் கிடைக்கும் வருமானம் கிடைக்காத பட்சத்தில் சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவு என்பவற்றை வழங்குவது சிரமம். இலங்கை மத்திய வங்கி கடந்த காலங்களில் ஒவ்வொரு ஆளும் தரப்பின் கீழும் பணத்தை அச்சிட்டுள்ளபோதிலும், தற்போது இலங்கை மத்திய வங்கி எக்காரணம்கொண்டும்; பணத்தை அச்சிட முடியாது. அதனால் வருமானம் கிடைத்தால் மட்டுமே சம்பளம், ஓய்வூதியம் என்பவற்றை வழங்க முடியும்.

அத்துடன், இன்னுமொரு ஆளும் தரப்பு வந்தாலும் இந்த முடிவை மாற்ற முடியாது. முடிவை மாற்றினால் முழு உலகமும் எமது நாட்டை கைவிட்டுவிடும். கொவிட் தொற்று பரவல் காலத்தில், நாடு முடக்கப்பட்டிருந்த காலத்திலும்கூட, வேலைக்குச் செல்லாமல் வீடுகளில் இருந்த ஊழியர்களுக்கும் ஆளும் தரப்புச் சம்பளம் மற்றும் மானியங்களை வழங்குவதற்கு பணத்தை அச்சிட்டதை நினைவுகூர்ந்த அமைச்சர், போராட்டக்குழுக்களுடன் தொடர்புடைய எந்தக் கட்சியும் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றாலும், இரண்டுவாரங்கள்கூட ஒருநாட்டை ஆள முடியாது என்று மேலும் தெரிவித்தார்.

## சமசரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளாகி, பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு உழைப்புக் கேற்ற ஊதியமின்றி தவித்துக்கொண் டிருக்கின்றனர். இந்த மக்களின் சம்பள உயர்வு சட்டப்பூர்வமாக வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டபோதும், அதனை எதிர்க்கும்சக்திதனியார் துறையான தோட்ட கம்பனிகளுக்கு இருப்பது ஆச்சரியப்படச் செய்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை முதுகெலும்பாக சுமந்துகொண் டிருக்கும்மலையகமக்களின்சம்பள உயர்வுக்கு எதிராக நீதிமன்றம் செல்கின்றார்கள் என்றால் தோட்டக் கம்பனிகள் நிர்வாகங்கள் எவ்வாறானகேவலமானநிலையில் இருக்கின்றன என்பதனை புரிந்துகொள்ள முடிகின்றது.

பெருந்தோட்டக் கம்பனி உரிமையாளர்களே நீங்கள் மாறுங்கள் இல்லாவிட்டால் நாங்கள் உங்களை மாற்றுவோம். இதேவேளை உடனடியாக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதரத்தை முன்னேற்ற நடவடிக்கை எடுங்கள். இல்லாவிட்டால் நாங்கள் மாற்ற வைப்போம் என்பதனை ஆளும் தரப்புக்குக் கூறிக்கொள்கின்றோம்.

மலையக மக்களின் சின்னங்கள், வண்ணங்கள் எதுவாக இருந்தாலும் அவர்களின் எண்ணங்கள் ஒன்றாகவே இருக்கின்றன. இந்தச் சமூகத்திற்கு விடிவு காலம் வர வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்ய வேண்டும். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை அதிகரிக்கப்பட வேண்டிய சம்பளம் இப்போது நான்கு வருடங்களாகியும் மாறாமல் இருக்கின்றது.

பெருந்தோட்டக் கம்பனிகள் தோட்டங்களை நடத்திச் செல்ல

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# ஜனாதிபதி திறந்துவைத்த கிளிநொச்சி வைத்தியசாலையின் பெண் நோயியல் வைத்திய நிலையம் தொடர்ச்சியாக பூட்டு

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் நெதர்லாந்து அரசின் நிதி உதவியுடன் சுமார் 5320 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த மே மாதம் 25 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் திறந்து வைக்கப்பட்ட பெண் நோயியல் வைத்திய நிலையம் தொடர்ந்து மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்மொழிவுக்கு அமைய நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் நவீன வசதிகள் கொண்ட மருத்துவ உபகரணங்களுடன் கூடிய இந்த பெண்நோயியல் வைத்திய நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலை கட்டட தொகுதி, போதிய ஆளணி வளம் இன்மையால் தொடர்ந்து மூடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

குறிப்பாக, நவீன வசதி கொண்ட இரு சத்திர சிகிச்சை கூடங்கள் இயங்காத நிலையில் உள்ளன. அதாவது மயக்க மருந்து வைத்திய ஆளணியின்மை காரணமாகவே இயக்க முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல கதிரியக்க வைத்திய நிபுணர் இன்மையால் அவற்றின் செயற்பாடுகளும் இடம்பெறுவதில்லை.

வைத்திய சிகிச்சைப் பிரிவு திறந்து வைக்கப்பட்ட போதிலும் போதிய ஆளணி வளங்கள் நியமிக்கப்படவில்லை. இதற்கான ஆளனி வளங்களை நியமிப்பதற்கோ அல்லதுஏற்கனவேவைத்தியசாலையில் இருக்கின்ற ஆளணி வளங்களைக் கொண்டோஅதனைஇயங்கவைப்பதற்கு மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்எனசுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வைத்திய சிகிச்சைப் பிரிவு இவ்வாறு நீண்ட காலம் மூடப்பட்டிருந்தால், ஏனைய வைத்தியசாலைகளில் இடம்பெறுவது போன்றுஇந்தவைத்தியசிகிச்சைப்பிரிவில் இருக்கின்றவைத்தியஉபகரணங்களை வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் கூட எதிர்காலத்தில் எடுக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இந்த வைத்திய சிகிச்சைப் பிரிவை இயங்க வைப்பதற்கு மத்திய மற்றும்மாகாணசுகாதாரஅமைச்சுகள்விரைந்துநடவடிக்கை




எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (05)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கி வழங்கிவைப்பு




யாழ்ப்பாணம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கியை வழங்கி வைத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் விபத்து மற்றும் சத்திர சிகிச்சைகள் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளுக்கானமின்சாரமாற்றீடுகள்இல்லாத நிலைதொடர்பில்கடந்தசிலநாள்களாக பேசப்பட்டு வந்தது.

அதனடிப்படையில், மேலதிக மின்பிறப்பாக்கியின் அவசியத்தை கருத்தில்கொண்டுவைத்தியசாலைக்கு தற்காலிக அடிப்படையில் பெற்றுக் கொடுக்க முயற்சி எடுத்து இருந்தேன்.

அதன் அடிப்படையில் செவ்வாய்க்கிழமை 150 கிலோவாட்ஸ் வலுவுடைய மின்பிறப்பாக்கியொன்று தற்காலிக அடிப்படையில் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக் கப்பட்டது.

இந்த மின்பிறப்பாக்கியை சாவகச்சேரிஆதாரவைத்தியசாலையின் தற்போதைய பதில் வைத்திய அத்தியட்சகர்வைத்தியர்கோபாலமூர்த்தி ரஜீவ் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது, நிரந்தர மின்பிறப் பாக்கியை பெற்று வைத்தியசாலையில் பொருத்து வதற்கான ஏற்பாடுகள் நடை பெற்றுவருவதாகவும், அதற்கான அறையொன்றை அமைக்கும்பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுவதாகவும் வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் தெரியப்படுத்தினார் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். (05)

# கிளி. கந்தசுவாமி ஆலய மஹா கும்பாபிஷேகம்



கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிசேகம் சிங்கல லக்கினமும் மக நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபவேளையாகிய 9.02 மணி முதல் 10.31 மணி வரையா சுபமுகூர்த்த வேளையில் இராஜகோபுரத் திற்கும் ஏனைய விமான ஸ்தூபிகளுக்கும் மூலாலய முருகப்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்தி களுக்கும் மஹா கும்பாபிசேகம் சிறப்பாக நடைபெற்றது. (05-113)

# இஸ்லாமிய புதுவருட தினத்தை முன்னிட்டு விஷேட நிகழ்வுகள்









(பாறுக் ஷிஹான்)

இஸ்லாமிய புதுவருடம் தினத்தை (முஹர்ரம்) நினைவு தினத்தை முன்னிட்டு ஹிஜ்ரி 1446 முஹர்ரம் தொடர்பான விஷேட நிகழ்வுகல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலய அதிபர் எம். எச். எஸ். ஆர். மஜீதிய்யாதலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்குபிரதம அதிதியாக மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அன்ஸார் பழீல்மௌலானா(நழீமி) சிறப்புரை ஆற்றினார்.

மாணவர்கள் மத்தியில் ஆற்றப்பட்ட இச்சிறப் புரையில் புதிய மாற்றங்களுக்கு முஸ்லிம் சமூகம்-எவ்வாறு முகங்கொடுப்பது தொடர்பிலும்,முஹர்ரம் நிகழ்வின் சிறப்புக்கள், மாணவர்கள் பேணும் விழுமியங்கள்,ஒற்றுமை,சமூக இணக்கப்பாடு உள்ளடங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது .நிகழ்வின் இறுதியில் பாடசாலையின் ஆசிரியை சுசான் பாயிஸால்வழங்கப்பட்ட இனிப்பும் பிரதம அதிதியால் சகல மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில்உதவி அதிபர் எம். ஏ. பாதிம் மிஸ்னா, ஆசிரியைகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலைஅபிவிருத்திச் சங்கநிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் தயார்ப்படுத்தல்

இன்னும் ஒரு வாரத்தில் அரசுத் தலைவர் தேர்தலை அறிவித்து அதனைப் பொறுப்பெடுத்து நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கைகளில் வந்துவிடும். அதற்கான ஆயதப் பணிகள் முடித்து எல்லாம் தயார் நிலையில் இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்திருக்கிறார்.

அரச அச்சகத்திடம் 5 தேர்தல்களுக்கு போதுமான எழுதுபொருட்கள் இருப்பதாக அரச அச்சக அலுவலகம் தெரிவித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் போது வாக்குச்சீட்டுக்களை அச்சடிக்கப் போதுமான காகிதாதிகள் இல்லாதிருந்த நிலையில் இப்போது அவையெல்லாம் எப்படி வந்தன என்று கேட்டுக்கொண்டிருக்காமல் தேர்தலுக்கான பணிகளை விரைந்து பூர்த்தி செய்து தேர்தலையும் விரைவில் நடத்துவதே சிறந்தது.

தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பில் இன்று நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளை விவாதம் ஒன்று நடக்கவுள்ளது. எதிர்க் கட்சிகளின் கோரிக்கையின் பேரில் இந்த விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விவாத்தில் தேர்தலை இயன்ற விரைவில் வைக்கும்படி எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்அனைவரும்ஒன்றிணைந்துவற்புறுத்துவர் என்று தெரிகின்றது. அப்படி நடந்தால் ஒக்டோபருக்கு முதலிலேயே தேர்தல் நடப்பதற்கான சாத்தியங்கள் உண்டு.

கடந்த தேர்தல்களை காட்டிலும் இந்த தேர்தலில் அச்சடிக்கும் செலவு நான்கு மடங்கு அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. இது தொடர்பான விரிவான மதிப்பீடு உடனடியாக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும் என அச்சகத்தின் தலைவர் திருமதி கங்கானி கல்பானி லியனகே குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை,ஜனாதிபதித்தேர்தலில்வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது முதல் தேர்தல் முடியும் வரை அனைத்துப்பாதுகாப்புஏற்பாடுகளும்உறுதிசெய்யப்படும் என பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டு விநியோகம் உட்பட அனைத்து நடவடிக்கைகளும் தடையின்றி மேற்கொள்ளப்படும் என தபால் மா அதிபர் குறிப்பிட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போது இந்த உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான முழு ஏற்பாடுகள் குறித்தும் அங்கு கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விண்ணப்பங்கள் உள்ளிட்ட ஆவணங்களை அச்சிடும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் படி ஜனாதிபதி தேர்தலை அறிவிக்கும் ஜூலை 17 க்கு ப்பின்னர் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே ஜனாதிபதியின் வசதியைப் பார்த்துக் கொண்டிராமல் இலங்கைக்குபுதியஉறுதியானதலைவர்ஒருவரைத்தெரிவு செய்வது தாமதமின்றி நிறைவேற வேண்டும். அதன் மூலமே அரசியல் மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டை இலங்கை பெற–முடியும். அதனை உறுதிப்படுத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கடமை. உள்ளூராட்சி சபைத் தேர்தலைக் கோட்டைவிட்டது போன்றல்லாமல் அரசுத் தலைவர் தேர்தல் நியாயமாகவும் நிதியாகவும் நடப்பது உறுதிப்படுத்தப்படவேண்டியது அவசியம்.





## கருவுறுதல்; அச்சுறுத்தும் எதிர்காலம்

**பெ. சுப்ரமணியன்**

பொருளாதார நெருக்கடி காரணமாக குழநதைகளின் பிறப்பு வீதம் குறைந்துவிட்டது என்பது அண்மையில் பேசு பொருளாக இருந்தது. இலங்கை பிரிட்ஷாரின் பிடியிலிருந்து விடுபட்ட காலத்தில் இருந்தே இலங்கையில் பிறப்பு வீதம் குறைந்தே வந்திருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் இதில் முக்கிய பங்கை வகித்தன. இப்போது இலங்கையில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் பிறப்பு வீதம் ஐக்கிய நாடுகள் பேரவையின் ஆகக் குறைந்த மட்டத்தை எட்டியிருப்பது எச்சரிக்கைக்குரியதாக இருக்கின்றது.

தற்போதையவாழ்க்கைமுறைகருவுறுதலுக்கான தன்மையை பெரிதும் பாதிக்கிறது. உணவு பழக்க வழக்கங்களில் ஏற்பட்டு வரும் மாற்றம், சுற்றுச்சூழல் பாதிப்புஉள்ளிட்டபல்வேறுகாரணங்களைக்கூறலாம். இலங்கையில் குழந்தையின்மை பிரச்சினையால் 4 லட்சம் தம்பதியினர் பாதிக்கப்பட்டுள்ளனர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கருவுறுதல் விகிதமானது கிராமங்கள், நகரங்கள், கல்வி மற்றும் பொருளாதார ரீதியாக வேறுபட்டு காணப்படுகிறது. பெண்கள் கருவுறுதல் விகிதத்துடன்ஒப்பிடும்போதுநகரங்களில்பிறப்புவீதம் குறைவாகவே காணப்படுகின்றது. கல்வியறிவும் கருவுறுதல் விகிதத்தில் தாக்கத்ததை ஏற்படுத்துகிறது என்பது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

இது ஒருபுறமிருக்க இரு பாலினத்தவருக்கும் மலட்டுத்தன்மை அதிகரித்து வருகிறது. இயல்பான பாலுறவுக்குப் பின் 12 மாதங்களோ அல்லது அதற்கு மேல் வரையோ கரு உருவாகாமல் இருப்பதே மலட்டுத்தன்மை எனப்படுகிறது. வாழ்வியல் மாறுபாடு காரணமாக மலட்டுத்தன்மை, பெண்கள் கருவுறாமை அதிகரித்து வருகிறது.

சர்வதேச அளவில் மலட்டுத்தன்மை குறித்த ஆய்வை உலக சுகாதார அமைப்பு மேற்கொண்டது. அந்த ஆய்வறிக்கையில் சர்வதேச அளவில் 18 வயதைக் கடந்தவர்களில் 17.5 சதவீதம் பேர் மலட்டுத்தன்மையால்பாதிக்கப்படுகின்றனர்என்றும், ஆறில் ஒருவர் இவ்வகையில் பாதிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு பாலரிடையேயும் மலட்டுத்தன்மைக்கான சரியான காரணங்கள் ஆராய்ந்து அறியப்படவில்லை எனகூறப்படும்வேளையில்,வெவ்வேறுசமூகங்களில் மலட்டுத்தன்மை வெவ்வேறு விதமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சமூக களங்கம், சரியான வழிகாட்டுதல் இல்லாமை ஆகியவை காரணமாக இந்த பிரச்சினைக்குத் தீர்வுகள் குறைவாகவே உள்ளன எனவும் ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

அதிக வருமானம் கொண்ட நாடுகளில் 17.8 சதவீதத்தினரும், நடுத்தர, குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் 16.5 சதவீதத்தினரும் மலட்டுத்தன்மையால் பாதிக்கப்படுவதாகவும் உலக சுகாதார அமைப்பு ஆய்வறிக்கையில் தெரியவந்துள்ளது. அதிகப்படியான மக்கள்தொகைப் பெருக்கம் காரணமாக இந்தியாவில் உள்ள நாம் பெரும்பொருட்டாகக்கருதாமல் அலட்சியப்படுத்தவும் செய்யலாம். ஆனால்மலட்டுத்தன்மைக்கானசிகிச்சை முறைகளை மேம்படுத்த வேண்டிய கட்டாயத்தை இந்த ஆய்வறிக்கை வெளிப்படுத்துகிறது.

மலட்டுத்தன்மை, கருவுறாமை என்பது ஆண், பெண் இனப்பெருக்க அமைப்பின் ஒரு நோயாகும். தற்போது பெரும்பாலான நாடுகளில் கருவுறுதல் சிகிச்சைகள் மக்களின் சொந்த செலவில் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காகப் பெரும் தொகையை செலவிட வேண்டிய சூழல் உள்ளது.

உலகம் முழுவதுமே மலட்டுத்தன்மைக்கு தீர்வாகக் கருதப்படும் செயற்கை முறை கருத்தரித்தல் அதிக செலவு கொண்டதாக இருக்கின்றன. மலட்டுத்தன்மைக்கான சிகிச்சை முறைகள் மேம்படுத்தப்பட உரிய கொள்கைகளை நாடுகள் எடுக்க வேண்டுமென உலக சுகாதார அமைப்பின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மலட்டுத்தன்மையால் பாதிக்கப்படுபவர்களில் தேவைப்படுபவர்களுக்குமலிவுவிலையில்உயர்தரக் கருவுறுதல், பராமரிப்புக்கான சேவையை வழங்க வேண்டிய அவசரத் தேவையையும் இது காட்டுவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகின் பணக்கார நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்படாமல் தற்போதைய நிலையே தொடர்ந்தால் வரும் 2045-ஆம் ஆண்டுக்குள் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் 50 சதவீத ஆண்கள் ஆண்மையற்றவர்களாகியிருப்பார்கள் என்றும் இது சர்வதேசபொருளாதாரத்திற்குப்பெரும்அச்சுறுத்தலாக இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரைச் சேர்ந்த இனப்பெருக்கஇயல்நிபுணர்ஷான்னாஸ்வான்எழுதிய 'கவுன்ட் டவுன்' எனும் ஆய்வு நூலில் ஆண்களின் இனப்பெருக்கத் திறன் கடந்த முப்பதாண்டுகளுக்கு முன்பே குறையத் தொடங்கியுள்ளதாகவும் 2060-ஆம் ஆண்டில் ஆண்களின் இனப்பெருக்கத் திறன் மிகக் குறைவாகவோ அல்லது இல்லாமலோ போவதற்கான வாய்ப்புகள் உள்ளது எனவும் எச்சரித்துள்ளார்.

மேலும், உயிரணுக்களின் எண்ணிக்கை 1990-ஆம் ஆண்டிலிருந்தே குறையத் தொடங்கிவிட்டதாகவும், ஒவ்வொரு ஆண்டும் ஒன்று முதல் இரண்டு சதவீதம் ஆண்மைக் குறைபாடுகள் தொடர்ந்து அதிகரித்து வந்திருக்கிறது எனவும், 2045-ஆம் ஆண்டு வாக்கில் முதல் குழந்தையை உருவாக்கவேசெயற்கைஇனப்பெருக்கமுறைகளின் உதவியை நாட வேண்டிய நிலை உருவாகிவிடும் என்றும் அவர் எச்சரிக்கிறார்.

ஒரு நாட்டில் கருவுறுதல் விகிதம் 2.1-ஐவிடக் குறைவாக இருந்தால், ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறை தொடர்வதற்குத் தேவையான குழந்தைகளைப் பெற முடியவில்லை என ஐக்கிய நாடுகள் சபை வரையறுத்துள்ளது. இலங்கையில் இந்த விகிதம் தற்போது 2.114 என்ற அளவிலேயே இருக்கின்றது. அதாவது ஐ.நா. வரையறுத்த எல்லைக் கோட்டில் நிற்கின்றது. அதிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா போன்ற வடக்கு நகரங்கள் இந்த எல்லைக்கும் குறைவான அளவிலேயே இருக்கின்றன. என்றால், ஒரு தலைமுறையைத் தொடர்வதற்கான தகுதியை இந்த மாவட்டங்கள் இழந்து வருகின்றன என்பது பொருள். இந்த மாவட்டங்களில் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் கருத்தரித்தல் கட்டுப்பாடு என்பன அதிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுவதும் கருவுறுதல் வீதம் குறைவதற்கான காரணமாக இருக்கின்றது. இந்த நிலையில், ஐ.நா.இலக்கைவிடக் குறைவான நிலையைத் தற்போது அடைந்திருப்பது கவலைக்குரியதாகும்.

காலைக்கதிர் Kalaikkathir

# சம்மாந்துறை குவாசி நீதிமன்ற செயற்பாடு மீள முன்னெடுப்பு

அண்மைக்காலமாக இடை நிறுத்தப்பட்ட சம்மாந்துறை குவாசி நீதிமன்ற செயற்பாடு மீண்டும் நேற்று (புதன்கிழமை) உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை குவாசி நீதிமன்றசெயற்பாடுநீதிச்சேவை ஆணைக்குழுவின்தீர்மானத்தின் பிரகாரம் சம்மாந்துறைகுவாஷி நீதிமன்றத்தின் பதில் குவாஷி நீதிபதியாக கடமையாற்ற நியமிக்கப்பட்ட அஹமட் லெவ்வை ஆதம்பாவா தலைமையில் உத்தியோகபூர்வ நிகழ்வு நடைபெற்றது .

இந்நிகழ்வின் சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யு.எம் அஸ்லம், சம்மாந்துறை பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் றினோசா , மனித எழுச்சி நிறுவன பணிப்பாளர் கே. நிஹால் அகமட், சாய்ந்தமருது பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். முஸ்பிறா, ர்நுழு நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஜெனிற்றா , சம்மாந்துறை உலமா சபை செயலாளர் , சம்மாந்துறை முன்னாள் குவாசி நீதிபதி எஸ்.எல். அப்துல் சலாம் , சம்மாந்துறை குவாசி நீதிமன்ற செயலாளர் வஹாப், மற்றும் மனித எழுச்சி நிறுவன தொண்டர்களான பாத்திமா முர்ஷிதா மற்றும் மிஸ்ரியா , மற்றும் சாய்ந்தமருது குவாசி நீதிமன்ற உத்தியோகத்தர்கள் சாய்ந்தமருது பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். முஸ்பிறா, உளவளத் துணை உத்தியோகத்தர் எம்.சி. பௌமிலாவும் கலந்து கொண்டனர் .

இதன் போது மனித எழுச்சி அமைப்பின் செயலாளரும் சம்மாந்துறைகுவாசிநீதிமன்றின் தொண்டராக கடமையாற்றும் ரிபா முஹம்மட் முஸ்தபா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

கடந்த காலங்களில் பொதுமக்களுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக சமூக ஊடகங்களில் வெளியாகிய காணொளி காரணமாகவும் இதர குற்றச்சாட்டுக்கள் காரணமாகவும் முன்னாள் சம்மாந்துறை குவாசி நீதிமன்ற நீதிபதி பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (05)

# கதிரைமலை ஏறும் கந்தன் அடியார்கள்: வாகனத்தில் ஏறுவதற்கு 600 ரூபாவாம்



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற கதிர்காமம் கதிரைமலை முருகனாலயத்தைத் தரிசிக்க மலையேறும் தமிழ் சிங்கள கந்தன் அடியார்களின் தொகை நாளுக்குநாள் அதிகரித்து;ச்செல்கிறது.

கதிர்காமத்திலிருந்து 3 கிலோமீற்றர் தொலைவில் ஏழுமலை என அழைக்கப்படும் கதிரைமலை ஆலயத்திற்கு செல்லும் மலையேறும் பாதை கடந்த காலங்களில்வெகுமோசமாகத்தூர்ந்துபோயிருந்தது.

இம்முறை கணிசமானளவு படிக்கட்டுகள் சீமேந்திட்டு செம்மையாக்கப்பட்டுள்ளன. கதிர்காமத்திற்குச் செல்லும் பக்தர்கள் கதிரைமலையேறாமல் வருவதில்லை.

மலையடிவாரத்திலிருந்து சுமார் 5000 கி.மீற்றர் உயரத்தில் ஆலயம் அமைந்துள்ளது. அந்தக்காலத்தில் மலை உச்சியில் வேலுடன் கூடிய முருகனாலயம் அமைந்திருந்ததாகக் கூறுவர்.

இன்று வேலுண்டு. நேர்த்திக்கடன் செலுத்துபவர்கள் வேலில் நைவேத்தியங்களை (அவல் கடலை பொங்கல்) சாத்தி வழிபட்டு அதனை அங்கு நிற்கும் சகல அடியார்களுக்கும் வழங்கி பகிர்ந்துண்பது வழக்கம்.

அருகில் வெள்ளை நிறத்தில் பாரிய பௌத்த விகாரை உள்ளது. சிவன் ஆலயமும் உள்ளது.அரச மரங்களும் பரவலாகக் காணப்படுகின்றன. எங்குமில்லாத குளிர்காற்று வீசிக்கொண்டேயிருப்பது சிறப்பம்சமாகும்.




கதிரமலை ஏறுகையில் இடையில் யாசகர் கூட்டமும் காணப்படுகின்றது. குரங்குகளின் அட்டகாசம் சொல்லுந்தரமன்று.

மலையேற முடியாதோருக்கு ஜீப்வசதிசெய்துகொடுக்கப்பட்டிருக்கிறது. தலைக்கு ரூபா 600 அறவிடப்படுகிறது.(05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மருதமுனை யுனிவர்ஸ் வி.க புதிய மேலங்கி அறிமுகம்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை யுனிவர்ஸ் விளையாட்டுக்கழகத்தின் புதிய மேலங்கியை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு கழகத்தின் பொதுச் செயலாளர் ஏ.எம்.எம்.றஜி தலைமையில் மருதமுனை எம்.சி ரேஸ்ட் இன் வரவேற்பு மண்டபத்தில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஐவா கெம்பஸ் நிறுவனத்தின் நிறைவேற்று முகாமைத்துவ பணிப்பாளர் வைத்தியர் எம்.எச்.எம்.முனாசிக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு யுனிவர்ஸ் விளையாட்டுக்கழகத்தின்நிர்வாகத்திடம் புதிய மேலங்கியை கையளித்தார்.

இந்த நிகழ்வில் கழகத்தின் உயர் பீட உறுப்பினர்கள், கழக வீரர்கள், அபிமானிகள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். இதன் போது யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு மேலங்கியை அன்பளிப்புச் செய்த சமூக சேவையாளர் வைத்தியர் எம்.எச்.எம்.முனாசிக்நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.(05)



# ரிஷாத் பதியுதீன் வெற்றிக்கிண்ணத்தின் கரபந்தாட்ட சுற்றுப்போட்டி இறுதி நாள்









மன்னார், தாராபுரம் அல் - ஜின்னா விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'ரிஷாத் பதியுதீன் வெற்றிக்கிண்ண கரபந்தாட்ட சுற்றுப்போட்டியின்' இறுதிநாள் நிகழ்வு, கடந்த ஞாயிற்றுக்கிழமை, தாராபுர கரப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, வெற்றிபெற்ற அணிக்கான கிண்ணத்தையும் பணப்பரிசில்களையும் வழங்கிவைத்தார்.

இதன்போது,முன்னாள்வடமாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் உவைஸ், இணைப்பாளர் முனவர், வனப்பாதுகாப்பு உத்தியோகத்தர் றிபாயிஸ், நஜிமுதீன், சஹாப்தீன், விளையாட்டுக்கழகத்தின் முக்கியஸ்தர்கள், விளையாட்டு வீரர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.(05)



## சமசரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமாயின்சமரசபேச்சுக்களை நடத்தி, சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மே மாதம் முதலாம் திகதியில் நிலுவை சம்பளத்துடன் சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும் - என்றார்.

## பயணிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசந்த யாப்பா பண்டார எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முச்சக்கரவண்டிகள்மக்களுக்கு பெரும்சேவையைவழங்குகின்றன. எனினும், அந்தச் சேவையை ஒழுங்குபடுத்தல் அவசியமாகிறது. அது தொடர்பில் போதிய அதிகாரம் இல்லாமையினால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

தற்போதுள்ளநிலையைமாற்றுவதற்காக சட்டமா அதிபர் திணைக் களத்துக்குஅனுப்பப்பட்டுஅங்கிருந்து அது மீள கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த வகையில் தற்போது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு பஸ்கட்டணங்கள்தொடர்பில்மட்டுமே தலையிட முடியும். பாடசாலை வான்கள், முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட வாகனங்களுக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஒழுங்குபடுத்தலை மேற்கொள்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு சட்டமூலமாக்கி சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அதனை அனுப்பி மீள பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் விரைவில் அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்து அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுநாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதேவேளை, கண்டி மாவட்டத்தில் 91,615 பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகள் சேவையில்உள்ளன. போக்குவரத்து சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள முறைமைக்கு இணங்க முச்சக்கர வண்டிகளில் மீற்றர் பொருத்தப்படுவது அவசியமாகும். அதன்படி, அறவிடப்படும்பணத்திற்கு அதில் பயணிப்போர் பற்றுச் சீட்டு கோருவார்களானால் அதுவும் வழங்கப்பட வேண்டும். அது தற்போதுமுறையாகநடைமுறையில் இல்லை.

சட்டம் திருத்தப்படும்போது இந்த அனைத்து விடயங்களும் அதில் உள்ளடக்கப்படும். அதேபோன்று, பயணிகள் முச்சக்கர வண்டியில் செல்லும்போது சாரதியின் புகைப்படம், முச்சக்கர வண்டியின் இலக்கம் உட்பட விவரங்கள் வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளதைப் போன்று காட்சிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்குஉரியஅனுமதி கிடைத்ததும்ஓரிருமாதங்களில்இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்றார்

## 10 ஆண்டுகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பதில்எந்தப்பயனும்இல்லை. எனவே, விற்பனையை அதிகரிக்கத் தேவையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆலோசனைகளை வழங்க நடவடிக்கை எடுக்க முடியும். நிறுவனங்கள் அந்தப் பொறுப்பை ஏற்குமானால் ஆளும் தரப்பு ஒத்துழைக்க எதிர்பார்க்கிறது.

புதிய சந்தை வாய்ப்புகளைப் பெற்று முன்னேற வேண்டும். கரந்தெனிய பிரதேச கறுவா அபிவிருத்தி நிலையமாக இந்த நிறுவனத்தை மாற்ற எதிர்பார்த்துள்ளோம். பழைய முறைப்படிஅன்றிநவீனமுறைப்படி இந்தவிவகாரங்கள்முன்வைக்கப்பட வேண்டும். எதிர்காலத்தைத் தேடி நாம் கடந்த காலத்தை அடைந்திருக்கிறோம்.

இறக்குமதிப்பொருளாதாரத்தில் நீடித்ததுதான் நமது நாடு வங்குரோத்தடைவதற்கு முக்கிய காரணமாகும். இறக்குமதிக்காக பெரியஅளவில்கடன்வாங்கினோம். சரியான பொருளாதாரக் கொள்கைகளால், இன்று நாம் வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட முடிந்தது. அத்துடன் நாம் செலுத்த வேண்டிய கடனில் இருந்து சுமார் 8 பில்லியன் டொலர்கள் குறைக்கப்பட்டு 2043 ஆம் ஆண்டு வரை கடனை செலுத்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு நாம் செல்லவில்லை என்றால் இன்னும் 15 வருடங்களில் நமது நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும். அப்படியானால், நாம் விரைவில் ஒரு புதிய பொருளாதாரக் கட்டமைப்புக்கு செல்ல வேண்டும். அங்கு ஏற்றுமதி பொருளாதாரம் மூலம் அந்நிய செலாவணியை ஈட்ட வேண்டும்.

அன்று நாம் உலகிற்கே கறுவாவை கொடுத்தோம். இப்போதுநாம்அந்தநிலைமைக்குத் திரும்ப வேண்டும். அக்காலத்தில் புத்தளத்திலிருந்துஅம்பாந்தோட்டை வரை கறுவா பயிரிடப்பட்டது. அந்தச் செயற்பாடுகளை திட்டமிட்ட அடிப்படையில் மீண்டும் ஆரம்பிக்கவேண்டும். மேலும், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் புதிய முதலீடுகளைப் பெறவும் நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

இரண்டு வருடங்களுக்கு முன் நாட்டில் நிலவிய நிலைமையைச் சொல்லத் தேவையில்லை. இந்த நாட்டை மீட்க முடியாது என்று சிலர் கூறினர். நான் பேராசையில் ஆட்சிக்கு வந்தாக சிலர் கூறினர். எப்படியோ நாம் நாட்டை மீட்டு விட்டோம். நாம் சரியான பாதையில் செல்லாவிட்டால், இந்த வெற்றி நம் கையிலிருந்து நழுவக்கூடும். இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான வழியை நாம் இப்போது காட்டியுள்ளோம். ஒவ்வொரு நபர்களும் வெவ்வேறு விடயங்களைச் சொல்கிறார்கள். பல்வேறு சுவர்க்கலோக வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் நாட்டின் வெற்றியை எவ்வாறுபாதுகாத்துமுன்னேறுவது என்பதில்கவனம்செலுத்தவேண்டும். எனவே இன்னும் 10 வருடங்கள் இந்த சரியான பாதையில் சென்றால் எந்த பிரச்சினையும் இல்லாமல் அபிவிருத்தி அடைய வாய்ப்பு இருக்கிறது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## சம்பள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்குத்தேவையானசட்டத்தை வகுப்பதற்கான செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ப் பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்குநியாயமானசம்பளத்தை செலுத்துவதற்குஒவ்வொருபிராந்திய பெருந்தோட்டக்கம்பனிகளிடமுள்ள இயலுமையைத்தீர்மானிப்பதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு மற்றும் அண்மைக் காலத்தில் நாட்டில் தோன்றியுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி தோட்டத் தொழிலாளருக்கு நாளொன்றுக்கு செலுத்த வேண்டிய சம்பளத்தை மதிப்பீடு செய்யுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு 2024.-05.-22 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்குறித்த சம்பளத்தை செலுத்துவதற்கு ஒவ்வொரு பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களிடமும் உள்ள இயலுமையைத்தீர்மானிப்பதற்காக குழுவொன்றைநியமிப்பது எனவும் குறித்த அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த குழுவின் விதந்துரைக்கமைய இயலுமை இருப்பினும், தமது தோட்டத் தொழிலாளர்களுக்குநிச்சயிக்கப்பட்ட சம்பளத்தை செலுத்தாத பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களுடன் அரசு செய்துள்ள காணிக் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்குத்தேவையானசட்டத்தை வகுப்பதற்கான செயன்முறையை துரிதப்படுத்துவதென அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

## பெருந்தோட்டப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்துள்ளது.

இந்திய அரசின் நிதியுதவியுடனும், இலங்கை அரசின் ஒத்துழைப்புடனும் நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில்தெரிவுசெய்யப்பட்ட தோட்டப்பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களுக்கான 60 'ஸ்மார்ட்' வகுப்பறைகளை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக இந்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக 2023.12.18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கருத்திட்டத்தை உயர்தர மாணவர்களைமாத்திரம்இலக்காகக் கொண்டு அமுல்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, குறித்த மட்டுப்பாட்டை நீக்குவதற்கு இந்திய உயர் ஆணையரகம், கல்வி அமைச்சு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தேசிய வரவ செலவுத் திட்டத் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் திருத்தம் செய்து கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக நீர்ப்பாசனம் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்புவசதிகள்அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த தகவல்களை அமைச்சரவை கருத்தில் கொண்டுள்ளது.

# தேசிய நூலகத்தில் பெரும் தீ விபத்து



கொழும்பிலுள்ள இலங்கைத் தேசிய நூலக, ஆவணவாக்கல் சேவைகள் சபையில் நேற்று (புதன்கிழமை) பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தேசிய நூலக, ஆவணவாக்கல் சேவைகள் சபையின்தரைதளத்திலுள்ள ஒன்று கூடும் மண்டபத்திற்கு அருகிலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்ததீவிபத்தைகட்டுப்படுத்தும் பணியில் பல தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

## பால்நிலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் 2020 வரையான காலப்பகுதியில் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் கூடியதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த செயற்பாட்டுத் திட்டத்தின் விளைவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தொடராய்வு மற்றும்மதிப்பீட்டுச்செயன்முறையில் புதியதேசியசெயற்பாட்டுத்திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஏற்புடைய அனைத்து பங்குதார நிறுவனங்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து தயாரிக்கப்பட்டுள்ள இலங்கையில் பால் மற்றும் பால்நிலை அடிப்படையிலானவன்முறைகளை ஒழிப்பதற்காக பல்துறைசார் தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை - (2024-2028)நடைமுறைப்படுத்துவதற்காக மகளிர், சிறுவர்விவகாரங்கள்மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## ஜனாதிபதித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று ஒத்திவைப்பு விவாதத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரிஎல்ல ஆகியோரால் கூட்டாக முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைய இந்த ஒத்திவைப்பு விவாதம் நடத்தப்படவுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல்பிரிவுதெரிவித்துள்ளது.

வாய்மூல விடைக்கான வினாக்களை தொடர்ந்து, காலை 10.30 முதல் மாலை 5.30 வரை விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு மற்றும் ஏனைய தொடர்புடைய சட்டங்களின் ஏற்பாடுகளுக்கமைய 2024 செப்டம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரையான காலப்பகுதியினுள் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது தொடர்பிலேயே இந்த விவாதம் இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல்பிரிவுதெரிவித்துள்ளது.




# சேவை நலன் பாராட்டு விழா







(எம்.ஏ.றமீஸ்)

கடந்த 34 வருட காலமாக கல்விச்சேவையாற்றிஓய்வுபெற்றுச் செல்லும் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) உதவி அதிபர் ஏ.எம்.நபீலின் சேவையைப்பாராட்டிகௌரவிக்கும் நிகழ்வு நேற்று (புதன்கிழமை) காலை கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில்இடம்பெற்றஇந்நிகழ்வின்போது ஓய்வுபெற்றுச் செல்லும் உதவி அதிபர்ஏ.எம்.நபீல்பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில்பிரதி அதிபர்களான என்.எம்.எம்.சாலிஹ், ஏ.எல்.நசீபா, உதவிஅதிபர்களானஎம்.ஐ.எல்.ஜாபீர், எம்.சம்ஸ் றபா உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த 34 வருட காலமாக ஆசிரியர் சேவையில் தன்னை அர்ப்பணித்து கல்விச் சேவை புரிந்துவந்த ஏ.எம்.நபீலின் சேவையைப்பாராட்டிபொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், பொற்கிளியும் வழங்கி வைக்கப் பட்டதுடன், நினைவுப் பரிசில்கள் மற்றும் வாழ்த்துப் பத்திரங்களும் அவருக்கு கையளிக்கப்பட்டன. இதேவேளை, இவரது சேவையை எடுத்தியம்பும் வகையில் பல்வேறு சொற்பொழிவுகளும் இடம்பெற்றதுடன், கலை கலாசார நிகழ்வுகளும் இதன்போது மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஓய்வுபெற்றுச்செல்லும் ஏ.எம்.நபீல், இப்பாடசாலையில்முதல் நியமனம் பெற்று தனது ஆசிரியர் சேவையை செவ்வன செய்து மாணவர்களின்அடைவுமட்டத்தை மேம்படுத்த உதவியதுடன், இப்பாடசாலையின்உதவி அதிபராக சேவையாற்றிபாடசாலையின்சிறந்த நிர்வாகத்திற்கும் தன்னலமற்ற சேவையையும் வழங்கியிருந்தார்.

இதுதவிர, அக்கரைப்பற்று லீடர் அஷ்ரஃப் கனிஷ்ட கல்லூரியின் அதிபராகவும் குறிப்பிட்ட சில காலம் இவர்தனதுசேவையைவழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(05)



காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனாதிபதியின் திட்டத்திற்கு அமைய ஜன சபை நிறுவுதல் தொடர்பில் வவுனியாவில் செயலமர்வு



ஜனாதிபதியின் திட்டத்திற்கு அமைய தேசிய ஜனசபையை நிறுவுதல் தொடர்பான செயலமர்வு ஒன்று வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.



கிராம மட்டத்தில் நிலைபேண் அபிவிருத்தியை, மக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கும் பொருட்டு ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் ஜனசபையை நிறுவுதல் தொடர்பான முன்னோடி செயற்திட்டத்தை தேசிய ஜனசபை செயலகம் முன்னெடுத்துள்ளது.

அதற்கமைவாக வவுனியா மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், இளைஞர், யுவதிகளுக்கு ஜனசபை தொடர்பாக தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் வவுனியா மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் வி.முகுந்தன் மற்றும் கணக்காளர் கே.சிவதர்சன் ஆகியோர் வளவாளராகக் கலந்து கொண்டுதெளிவுபடுத்தியிருந்தனர்.

அத்துடன், செட்டிகுளம் பிரதேச செயலகபிரிவுக்குட்பட்டகிராமமட்ட அமைப்புக்களுக்கு தெளிவுபடுத்தும்செயற்திட்டம்முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், அதில் வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினரும், ஆசிரியருமான கி.வசந்தரூபன் வளவாளராக கலந்துகொண்டு தெளிவுபடுத்தியிருந்தார்.

(05 - 100)

# ஒலுவில் அல் – ஹம்றா வித்தியாலயம் 30 போட்டிகளில் மாகாணத்திற்கு தெரிவு



(எஸ்.அஷ்ரப்கான்)

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் மூன்று



நாள்களாக நடைபெற்ற அக்கரைப்பற்று வலய பாடசாலைகளுக்கிடையிலான 2024 ஆம் ஆண்டுக்கான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில், ஒலுவில் அக்ஃஅல் - ஹம்றா மகா வித்தியாலயம்

மொத்தமாக 31 இடங்களை பெற்றுக் கொண்டது.

இங்கு ஆண்கள் பிரிவில் 21 போட்டிகளும் பெண்கள் பிரிவில் 09 போட்டிகளும் இடம் பெற்றது.இதில் 18-முதலாம் இடங்களையும்,

12- இரண்டாம் இடங்களையும் 01-மூன்றாம் இடத்தையும் இம்மாணவர்கள்பெற்றுக்கொண்டனர்.

வெற்றிபெற்ற மாணவர்கள் மற்றும் இம்மாணவர்களை வழி நடத்திய அதிபர் அஷ்-ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம், இணைப்பாட விதானத்திற்கு பொறுப்பானபிரதிஅதிபர்ஜே.வஹாப்தீன் மற்றும்பிரதி உதவி அதிபர்கள், ஆசிரிய ஆசிரியைகளுக்கும் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களான ஆர்.நௌஸாத், ஏ.எம்.எம்.கியாஸ் மற்றும்

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.அஸ்மத் ஸஹி ஆகியோருக்கும் பாடசாலை சமூகம் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

(05)

# மாணவ தலைவர்களுக்கு சின்னஞ் சூட்டும் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனைஇஸ்லாமாபாத்முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் தலைமையில் இடம்பெற்றது.

2024 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் தலைவர்களை தெரிவு செய்யும் தகுதிகாண் காலத்தில் உரிய தகைமைகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்குஇவ்வாறுசின்னங்கள் சூட்டப்பட்டன.

பாடசாலையின் ஒழுக்காற்றுக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதல் சின்னத்தை அதிபர் அவர்கள் சிரேஷ்ட மாணவத் தலைவருக்கு சூட்டியதோடு பிரதி அதிபர்கள், பகுதிதலைவர்கள், ஆசிரியர்கள் ஏனைய மாணவத்தலைவர்களுக்கான சின்னங்களைச் சூட்டினர். (05)

# மலேசியாவில் பட்டப்படிப்பை தொடரும் மாணவர் விசா காலத்தை அதிகரிக்குக

## கிழக்கு மாகாண ஆளுநர் வேண்டுகோள்

(நூருல் ஹுதா உமர்)

மலேசியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மலேசியா உயர் கல்வி அமைச்சர் ஷாம்ப்ரி அப்துல் காதிரை சந்தித்து இலங்கைக்கும் மலேசியாவுக்குமான கூட்டுத்திட்டம் குறித்து கலந்துரையாடினார்.

மலேசியாவில் உயர்கல்வி கற்கும் 3800 இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் தற்போதைய சட்டத்தின் படி ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் இலங்கைக்கு திரும்பி விசாவைப் புதுப்பிக்கும் நிலை காணப்படுகிறது. ஆதலால் அவர்களின் பட்டப்படிப்பை நிறைவு செய்யும் காலமான 4 வருடங்களுக்கு விசா காலத்தை அதிகரித்து தருமாறு மலேசியா உயர் கல்வி அமைச்சர் ஷாம்ப்ரி அப்துல் காதிரிடம் ஆளுநர் வேண்டுகோள் விடுத்தார். ஆளுநரின் வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சர் அதற்கான நடவடிக்கை யை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் இருந்து மலேசியாவிற்கு செல்லும் மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு மலாய் மொழிக்கான பயிற்சியை இலங்கையில் ஆரம்பிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், மலேசியாவிற்கும் இலங்கைக்குமான கல்வி தொடர்பான கூட்டு பரிமாற்ற திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

ஹிளழவி2இக்கலந்துரையாடலில்நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீஊண சரவணன் முருகன் மற்றும் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் சுமங்கல டயஸ் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.(05)

# மாத்தளையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு அருட்தந்தை காயம்

## சந்தேகநபர் கைது

மாத்தளை பிரதேசத்தில் உள்ள விளையாட்டு மைதானமொன்றிற்கு அருகில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுஅருட்தந்தைஒருவர்காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்குள்ளான அருட்தந்தை மாத்தளை பிரதேசத்தில்உள்ளவிளையாட்டுமைதானமொன்றில் உடற்பயிற்சியில் ஈடுபட்டு பின்னர் ஆலயத்தை நோக்கி செல்வதற்காக தனது காரில் ஏற முற்படும் போது இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குள்ளான அருட்தந்தை காயமடைந்த நிலையில் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்ததாக்குதலைமேற்கொண்டதாக கூறப்படும் சந்தேக நபர் மாத்தளை களுதாவளை பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து இந்த தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் கூரிய ஆயுதம் மற்றும் லொறி ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மாத்தளை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# மாவடிவேம்பு வைத்தியசாலைக்கு பழுதடைந்த பாண் விநியோகம்

## கடை உரிமையாளருக்கு ஒரு மாதச் சிறை



மட்டக்களப்பு மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலைக்கு பழுதடைந்த பாண் வழங்கியகடைஉரிமையாளருக்குஒரு மாதகால சிறைத்தண்டனையையும் வழங்கிதிங்கட்கிழமைஏறாவூர்நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது .

மாவடி வேம்பு பிரதேச வைத்தியசாலை நோயாளிகளுக்கு காலை உணவாக மனித நுகர்விற்கு பொருத்தமற்றபழுதடைந்தபாண்வழங்கியதால் நோயாளர்கள் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து சுகாதார வைத்திய அதிகாரி, மற்றும் செங்கலடி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் வழிகாட்டலில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுகளை வைத்தியசாலைக்கு வழங்கிய ஒப்பந்தகாரர் மற்றும் கடை உரிமையாளர் ஆகிய இருவருக்கும் எதிராக ஏறாவூர் நீதிவான் நீதிமன்றில் திங்கட்கிழமை வழக்கு தாக்குதல் செய்து இருவரையம் ஆஜர்படுத்தினர்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் நோயாளர்களுக்கு உணவு வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தகாரரின் ஒப்பந்தத்தினை உடனடியாக இரத்து செய்ததுடன், 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் அதை உரிய தவணையில் செலுத்த தவறினால் 3 மாதகால சிறைத்தண்டனையும் 10 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாத சிறை தண்டனையும் வழங்கியதுடன் உணவு தயாரித்து வழங்கிய கடை உரிமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் ஒரு மாதகால சிறை தண்டனையும் விதித்து ஏறாவூர் நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# இயற்கை முறை வீட்டுத்தோட்டம் 60 மாணவர்களுக்குச் செயலமர்வு

(நூருல் ஹுதா உமர்)

பேரா உதவிக் கரங்கள் அமைப்பின் நிதியனுசரணையில் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தால் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்திற்கு சிறி கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்கான ஒரு நாள் இயற்கை விவசாய வீட்டுத் தோட்டச் செயலமர்வு நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் தலைவர் வினோஜ்குமார் தலைமையில் பாடசாலையின் விஜயகுமாரன் அரங்கில் இடம்பெற்றது.

இதன்போதுபாடசாலையின்அதிபர்இளங்கோவன் அவர்களும், நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் உபதலைவர் லுசாந் அவர்களும் இளைஞர் சேவை அதிகாரி டொஜானி அவர்களும் மற்றும் பபேசா மற்றும் லோஜி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இச் செயலமர்வில் போது மண் பண்படுத்தல், விதைகள் நடுகை, வினைத்திறனான நீர்ப்பாசனம், வீட்டுத் தோட்ட முகாமைத்துவம், பீடைக்கட்டுப்பாடு முறைகள், நிலைபேறான வீட்டுத் தோட்ட முயற்சியாண்மை போன்ற செயற்பாடுகளை மாணவர்களுக்கு செயன்முறையாக காட்டப்பட்டன. இத்திட்டம் தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு மாதமும் மாணவர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள்வழங்குவதற்குவிசேடநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் தங்களது ஓய்வு நேரத்தில் பெற்றோருடன்சேர்ந்து வீட்டுத் தோட்டம்செய்வதால் நஞ்சற்ற உணவு உற்பத்தி மற்றும் ஒவ்வொரு வீட்டிலும் 8000 ரூபாவுக்கு மேல் சேமிக்க முடியும் என்பதை இலக்காகக் கொண்டு இச் செயலமர்வு திட்டமிட்டிருப்பது விசேட அம்சமாகும்.

இதன் போது 60 மாணவர்களுக்கு வீட்டுத் தோட்டம் செய்வதற்கான பயிர்கன்றுகள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டன. போரா உதவிக் கரங்கள் அமைப்பு இலங்கையில் பல நிலைபேறான மனிதநேயப் பணிகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# சொகுசு பஸ் வீதியை விட்டு விலகி முள்ளிப்பொத்தானையில் விபத்து



திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி திருகோணமலை பிரதான வீதியின் 96 ஆம் கட்டை முள்ளிப் பொத்தானையில் கொழும்பிலிருந்து செவ்வாய்க்கிழமை திருகோணமலை நோக்கி வந்த அதிசொகுசு தனியார் பயனிகள் போக்குவரத்து பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்படி சம்பவம் நேற்று (புதன்கிழமை) அதிகாலைஇடம்பெற்றுள்ளது. குறித்தபஸ்பாதையை விட்டுவிலகிவிபத்துக்குள்ளாகியுள்ளது.. தனியாருக்கு சொந்தமான அதிசொகுசு பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியதாக தெரியவருகிறது.



சாரதி, நடத்துனர் உட்பபயணிகள்சிலரும் காயமடைந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

சம்பவ இடத்துக்கு தம்பலகாமம் போக்குவரத்து பொலிஸார் விரைந்துள்ளனர். நித்திரை கலக்கமே விபத்துக்குகாரணம்என ஆரம்பகட்ட விசாரனை மூலம் தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(05)

# கனேடிய உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதிகளுடன் தேர்தல் தொடர்பில் இராஜகிரியவில் கலந்தாய்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் மற்றும் கனேடிய உயர்ஸ்தானிகராலயஅரசியல்பிரிவுபிரதிநிதிகளுடன் அண்மையில் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது.

கனேடிய உயர்ஸ்தானிகராலய இரண்டாவது செயலாளர் (அரசியல்) பேட்ரிக் பிக்கரிங் மற்றும் அரசியல் பிரிவு பொறுப்பாளர் ஜி.சாஹித்யனன் ஆகியோர் இராஜகிரியவில் உள்ள கபே தலைமைஅலுவலகத்தில் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

தற்போதைய அரசியல் நிலைவரம், எதிர்வரவிருக்கும் தேர்தலுக்கான தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள், கடந்தகால தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் வாக்காளர்கள் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம்மற்றும்அரசியலில் பெண்கள் பங்கேற்பு போன்றவற்றை உள்ளடக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றது. கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் கபே குழுவுடனான கலந்துரையாடலுக்கு தலைமை தாங்கினார். இந்த கலந்துரையாடலில் கபே நிர்வாக பணிப்பாளர் திருமதி. சுரங்கி ஆரியவன்ஷவும் கலந்துகொண்டார். (05)

# திருக்கோவிலில் தொல்லியல் வார விழிப்புணர்வு செயலமர்வு நிகழ்வு



(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் தொல்லியல் வார விழிப்புணர்வு செயலமர்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தொல்லியல் திணைக்களம் கடந்த 07-07-2024 தொடக்கம் 2024-07-14 ஆம் திகதி வரை தொல்லியல் வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளது.



இவ்விடயம்தொடர்பாகதிருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில்தொல்பொருள்இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை பாதுகாப்பது தொடர்பாக விழிப்புணர்வு கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தொல்பொருள்இடங்களைப்பாதுகாப்பது தொடர்பாக கிராம மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இக் கலந்துரையாடலில் கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.கந்தசாமி, காணிபிரிவின் பிரதம முகாமைத்துவசேவைஉத்தியோகத்தர் திருமதி.எஸ்.கஸ்தூரி மற்றும் தொல்பொருள் இடங்கள் அமைந்துள்ள கிராமசேவகர்பிரிவுகளான தம்பிலுவில் 01 மேற்கு, விநாயகபுரம் 03, கஞ்சிகுடியாறு, காஞ்சிரங்குடா, சாகாமம், தங்கவேலாயுதபுரம், சங்கமன் கிராமம் போன்ற இடங்களில் உள்ள கிராம சேவை உத்தியோகத்தர்கள் , பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மதகுருமார்கள், ஓய்வுபெற்றஅரச உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திசங்க உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் போன்றவர்கள் கலந்து கொண்டனர்.(05)



# நெதர்லாந்திலிருந்து வந்த நாய் 7 குட்டிகளை ஈன்றது

பொலிஸ் நிலைய மோப்ப நாய் பிரிவின் கடமைகளுக்காக 58 மில்லியன்ரூபாசெலவில்நெதர்லாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட பொலிஸ் மோப்ப நாய்களில் 'இங்கிலீஸ் ஸ்பானியல்' ரக பெண் நாய் கண்டியில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் செவ்வாய்க்கிழமை 07 நாய்குட்டிகளை ஈன்றள்ளது.

இந்த ஏழு நாய்க்குட்டிகளின் பெறுமதி ஒரு கோடி ரூபாவை அண்மித்துள்ளதாக பொலிஸ் மோப்ப நாய் பிரிவு தெரிவித்துள்ளதுடன், இந்த நாய்க்குட்டிகள் அனைத்தும் ஒரு மாத காலத்திற்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

ஏழு குட்டிகளும் தாயும் கால்நடை மருத்துவர்களின் மேற்பார்வையில் உள்ளனஎனவும்,தனிமைப்படுத்தப்பட்ட காலம்முடியும்வரை வேறுவிலங்குகள் அணுக அனுமதிக்கப்படாது என குறித்த பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி காஞ்சன கொடகும்புர தெரிவித்தார்.

நெதர்லாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 35 நாய்கள் 08-12 மாதங்களுக்கு இடப்பட்டவை என்பதுடன், ஒரு மாத தனிமைப்படுத்தலின் பின்னர், வெடி பொருட்களைக்கண்டறிதல், குற்றவியல் விசாரணை மற்றும் போதைப்பொருள் பரிசோதனைகள் தொடர்பான பயிற்சிக்கு அனுப்பப்பட்டு கடமை நடவடிக்கைகளில் இணைக்கப்படும் எனவும் மேலும் தெரியவருகிறது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.07.2024இல் வெளியிடப்பெற்றது